OS.No. 53/2020

Date : 16.09.2025.

Witness Name & Rank – சரஸ்வதி - PW1

**சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் இல்லை.நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் ஒரு இடத்தை வாங்குவதற்காக முன்பணம் கொடுத்தேன் ஆனால் பிரதிவாதி இன்று எழுதி தருகிறேன் நாளை எழுதி தருகிறேன் என காலம் தாழ்த்தி வந்தார் வேறு யாருக்கோ எழுதித் தருவதாக கேள்விப்பட்டேன் எனவே வழக்கு போட்டு உள்ளேன். தாவா சொத்து மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் ஒரு ஏக்கர் 20 சென்ட் நிலம் ஆகும். இந்த வழக்கிலும் குறிப்பிட்டுச் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் சங்கதிகள் எங்களது வழக்கறிஞருக்கு சட்ட அறிவிப்பு சமயத்திலும் வழக்கு தாக்கல் செய்த போதும் யார் சொன்னது என்றால் எனது மகன் சபாபதி சொன்னார். மேற்படி இடத்தில் கிணறு பாதை எவ்வளவு விஸ்தீரனம் என்றால் நான் வாங்க முற்பட்டது காலி இடமாகும் ஒரு ஏக்கர் 20 சென்ட்டும் காலி நிலமாகும்.மேற்படி தாவா சொத்து இந்த நீதிமன்றத்தில் இருந்து சுமார் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் மூன்று அல்லது நான்கு கிலோமீட்டர் இருக்கும்.
2. நான் சொல்வது தவறு என்றும் மேற்படி வழக்கு சொத்தானது இந்த நீதிமன்றத்தில் இருந்து சுமார் ஒன்றரை கிலோ மீட்டர் துாரத்தில் தான் உள்ளது நான் வழக்கிற்காக மூன்று நாலு கிலோ மீட்டர் என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து எந்த கிராமத்திற்குள் அமைந்துள்ளது என்றால் பல்லடம் கிராமத்திற்குள் அமைந்துள்ளது. மேற்படி வழக்கு சொத்து பல்லடம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதி என்றால் சரிதான். நான் விலக்கிப் பேசிய பூமியில் கிணறு உள்ளது என்றால் நான் காலி இடத்திற்கு தான் பேசினேன். அதில் கிணறு இருந்தது என்றால் சரிதான். நான் தாவா சொத்திற்கு எத்தனை முறை சென்று உள்ளேன் என்றால் ஐந்து முறை சென்று உள்ளேன். மேற்படி

வழக்கு சொத்து எங்கு உள்ளது என்றால் கொசவம்பாளையத்தில் ஊரை ஓட்டி உள்ளது, ஊரை ஒட்டி தென் வடலாக ஒரு சாலை செல்கிறது என்றால் சரிதான்.

3. மேற்படி சாலையில் இருந்து வழக்கு சொத்து எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் சுமார் 10 மீட்டர் தொலைவில் உள்ளது. வழக்கு சொத்தை ஒட்டி ஒரு கிணறு உள்ளது என்றால் கிணறு உள்ளது ஆனால் கிணற்றுக்கு நாங்கள் விலை பேசவில்லை, அதில் பங்கு எதுவும் கோரவில்லை என்றால் சரிதான்.வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எனவே மேற்படி காலை எண் உட்பிரிவு குறிப்பிட்டு தெரியாது என்றால் சரிதான். மேற்படி வழக்கு சொத்தின் செக்கு பந்திகள் தெரியுமா என்றால் தெரியாது. நான் யாரிடம் சென்று விலை பேசினேன் என்றால் பிரதிவாதி ராஜேஸ்வரி மற்றும் நடராஜன் அவர்களிடம் பேசினேன். எந்த தேதியில் விலை பேசினோம் என்றால் தேதி ஞாபகம் இல்லை சுமார் 7 ஆண்டுகள் இருக்கும் ( சாட்சி தற்போது 2018 ஆவணி முதலில் பேசியதாக சாட்சியம் அளிக்கிறார்)மேற்படி வழக்கு சொத்திற்கு அருகாமையில் பிளாக் போட்டு விற்பனை செய்து வருகிறார்கள் அதை ஒட்டி அம்மன் நகர் அமைந்துள்ளது என்றால் சரிதான். அதேபோல் வடக்கு சொத்திற்கு தென்புறம் சின்னையன் கார்டன் என்ற பெயரில் மனைப்பிரிவு உள்ளது என்றால் சரிதான். மேற்படி சின்னியன் கார்டன் மனை பிரிவில் உள்ள வீடுகள் ஒரு சென்ட் ரூபாய் ஆறு லட்சத்திற்கு செல்கிறது என்றால் சரிதான், ஆனால் நான் வாங்கிய போது அவ்வளவு இல்லை. நான் வாங்க முற்பட்டபோது எவ்வளவு ரூபாய்க்கு ஒரு சென்ட் சென்றது என்றால் ரூபாய் மூன்று லட்சத்திற்கு சென்றது. மேற்படி வழக்கு சொத்திற்கு தென்புறமாகவும் மேற்கு புறமாகவும் எஸ் கே டி என்ற பெயரில் நிறுவனம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

4. நான் தற்போது எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் வடுகபாளையம் புதூரில் குடியிருந்து வருகிறேன். ஆனால் எனது பிரமாண்ட வாக்குமூலத்தின் நான் பொள்ளிக்காளிபாளையம் கரைபுதூர் கிராமத்தில் குடியிருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் நான் வழக்கு போட்ட போது அங்கு தான் இருந்தேன் அதன் பிறகு வீட்டை வாடகைக்கு விட்டுவிட்டு பல்லடம் எல்லைக்குள் வந்து விட்டேன். அவ்வாறு நான் முகவரி மாற்றி தங்கி இருப்பதை எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

பொள்ளிக்காளிபாளையத்தில் எனக்கு தோட்டங்கள் உள்ளது என்றால் வீடு உள்ளது தோட்டம் இல்லை. மேற்படி பொள்ளிகாளிபாளையம் பல்லடத்தில் இருந்து எவ்வளவு தூரம் என்றால் 10 கிலோமீட்டர் இருக்கும். தற்போது நான் உள்ள வீட்டின் விலை நிர்ணயம் எவ்வளவு என்றால் ஒரு சென்ட் பத்து லட்சத்திற்கு செல்லும். நான் விலை பேசியதாக சொல்லப்படும் சமயத்தில் எனது கிராமத்தில் விலை நிர்ணயம் எவ்வளவு என்றால் ஒரு செண்ட் மூன்று லட்சத்திற்கு செல்லும். நான் வருமான வரி செலுத்துபவர் என்றால் சரிதான். நான் எவ்வளவு வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை எனது மகன்தான் செலுத்தி வருவார். எனக்கு என்ன வருமானம் என்றால் வீட்டு வாடகைகள் வரும். எவ்வளவு வீட்டு வாடகை வருகிறது என்றால் மாதம் ரூபாய் 15,000 வரும் அதைத்தவிர வேறு வருமானங்கள் இல்லை என்றால் வேறு எதுவும் இல்லை ஆடு மாடுகள் இல்லை. எனது வழக்கின்படி நான் முன் பணமாக செலுத்தியதாக சொல்லப்படும் தொகையை ரொக்கமாக தான் கொடுத்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

5. எவ்வாறு பணம் எனக்கு வந்தது என்றால் நான் சீட்டு போட்டு இருந்தேன். யாரிடம் சீட்டு போட்டு இருந்தேன் என்றால் எங்கள் ஊரில் கோயில் சீட்டு ரூபாய் 5 லட்சத்திற்கு போட்டு இருந்தேன், அதை அப்படியே பெற்று முன்பணமாக கொடுத்தேன். எப்போது சீட்டு போட்டு எடுத்தேன் என்றால் அந்த விவரங்கள் எனக்கு ஞாபகம் இல்லை. ஒப்பந்த தேதியிலிருந்து எவ்வளவு நாட்களுக்கு முன்பு சீட்டு எடுக்கப்பட்டது என்றால் அதன் விவரங்கள் ஞாபகம் இல்லை. அந்த சீட்டு எடுத்து ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் தயாராக உள்ளேன் என்றால் சரிதான். அடுத்த வாய்தாவில் தேவைப்பட்டால் ஆஜர் செய்ய முடியும் என்றால் சரிதான். தாவா சொத்தில் என்ன வகையான மரங்கள் உள்ளது என்றால் தென்னை மரங்கள் உள்ளது எவ்வளவு என்றால் அது ஞாபகம் இல்லை. வழக்கு சொத்தில் தான் தென்னை மரங்கள் உள்ளது என்றால் சரிதான். சுமார் 100 தென்னை மரங்கள் இருக்கும் என்றால் சரிதான். அவ்வாறு வழக்கு சொத்தில் நூறு தென்னை மரங்கள் உள்ளதாக கிரைய ஒப்பந்தத்தில் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு மகன் ஒரு மகள் ஆகும். எனது மகனுக்கு என்ன வருமானம் என்றால் கம்பெனிக்கு சென்று வருகிறார். என்ன கம்பெனி

என்றால் திருப்பூரில் Fine Fit என்ற பனியன் கம்பெனி ஆகும்.

6. எவ்வளவு காலமாக அங்கு பணியாற்றி வருகிறார் என்றால் அவரது சிறு வயது முதல் பணியாற்றி வருகிறார். தேவைப்பட்டால் அவர் வேலை செய்யும் ஆவணங்களை தாக்கல் செய்ய இயலும் என்றால் சரிதான். தாவா சொத்தில் ஒரு ஓரமாக விசைத்தறி குடோன் உள்ளது என்றால் நான் விலை பேசியபோது இல்லை. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் அந்த விசைத்தறி குடோன் அங்கே 25 ஆண்டுகளாக உள்ளது என்றால் சரியல்ல. நான் பதிவுத்துறை அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்ய காத்திருந்ததாக சொல்லி உள்ள நிலையில் அவ்வாறு பத்திர பதிவு செய்ய விண்ணப்பிக்கப்பட்ட டோக்கன் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதேபோல் கிரைய ஆவணம் தயார் செய்த வரைவு கிரைய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி நிலத்தை வாங்குவதற்கு தேவையான வருமானத்தை காட்ட எந்தவிதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். மேற்படி பிரதிவாதி இரண்டு பெண் குழந்தைகளுக்கும் திருமணம் நடந்து விட்டது என்றால் சரிதான் நான் விலை பேசியபோது திருமணம் நடந்திருந்ததா என்றால் ஒருவருக்கு திருமணம் முடிந்து குழந்தையுடன் இருந்தால் இன்னொருவர் திருமணம் ஆகாமல் இருந்தார். நான் விலை பேச முற்பட்டபோது இரண்டாவது பெண்ணுக்கு வரன் பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்றால் அந்த விவரங்கள் தெரியாது. மேற்படி முதல் பெண்ணுக்கு வைத்தியம் பார்ப்பதற்காக பணம் தேவைப்பட்டதாக பிரதிவாதி சொன்னார் என்றால் பிரதிவாதி என்னிடம் முதல் பெண்ணுக்கு வைத்தியம் பார்ப்பதற்காக பணம் தேவைப்படுவதாகவும் அதனால் முன்பணத்தை கையில் ரொக்கமாகவே தர சொன்னார். மேற்படி பணம் கொடுத்ததற்கு பிரதிவாதி பட்டியல் எதுவும் கொடுத்தாரா என்றால் இல்லை, நான் இடம் வாங்க தான் பணம் கொடுத்தேன்.பிரதிவாதி எந்த ஒரு காலத்திலும் நிலத்தை விற்பதற்கு என்னிடம் பணம் வாங்கவில்லை அவரது முதல் பெண்ணுக்கு வைத்தியம் பார்ப்பதற்காகவும், திருமணத்தில் ஏற்பட்ட கடனை தீர்ப்பதற்கும், இரண்டாவது பெண்ணுக்கு திருமணம் செய்து வைப்பதற்காகவும் ரூபாய் 5 லட்சம் கடன் என்னிடம் பெற்று அதற்கு ஒரு பாதுகாப்பிற்காக ஆவணம் எழுதப்பட்டது

என்றால் சரியல்லநான் வழக்கு சொத்திற்கு இதுவரை சென்றதில்லை மேற்படி கடன் கேட்டு நீலமேகம் என்ற புரோக்கர் மூலமாக வந்த தகவலை பெற்று எனது மகன் சபாபதி வழக்கு சொத்தை சென்று பார்த்து அதன் பிறகு கடன் கொடுத்து ஆவணம் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கிரைய ஒப்பந்த ஆவணமானது எந்த காலத்திலும் பிரதிவாதியாலும் இல்லை எந்நாளும் கிரயம் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் அல்ல வெறுமனே கடன் பாதுகாப்பிற்கு எழுதப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நான் கிரைய ஒப்பந்தம் போடப்பட்ட போது மேற்படி வழக்கு சொத்தில் ஒரு சென்டின் மதிப்பு ரூபாய் 5 லட்சம் ஆகும் எனவே வெறும் ஐந்து லட்சம் பணத்திற்கு ஒரு ஏக்கர் 22 சென்ட் நிலத்தை கிரயம் செய்ய யாரும் முன்வர மாட்டார்கள் எனவே அதன் அடிப்படையிலேயே எனது வழக்கு ஏற்றுதை ஆற்றுக பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது மகன் சபாபதி நிதி நிறுவனம் நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல.

7. அதுபோன்ற பல பண பரிவர்த்தனைகளில் வழக்குகள் உள்ளது என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும் எனது மகன் நிதி நிறுவனம் நடத்தி வருகிறார் அவர் பல வழக்குகளை நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்து வெறும் காலி மனை அல்ல தாவா சொத்தில் கிணறு வீடு குடோன்கள் உள்ளது என்றால் சரியல்ல. நான் வெறும் கடனுக்கு பாதுகாப்பிற்காக எழுதப்பட்ட ஆவணம் என்பதால் நான் வழக்கு சொத்திற்கு சென்றதில்லை அவ்வாறு சென்று இருந்தால் மேற் சொன்ன பௌத்தீக அமைப்புகள் எனக்கு தெரிய வந்திருக்கும் என்றால் சரியல்ல. நான் ஒப்பந்தத்தில் மேற்படி வழக்கு சொத்தின் அமைப்புகள் குறித்து சொல்லி உள்ளேன் ஆனால் வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை அதிலிருந்து எனக்கு வழக்கின் சொத்தில் அமைப்புகள் குறித்து ஒரு தெளிவான புரிதல் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி காலி இடமானது ஒரு ஏக்கர் 20 சென்ட் நிலம் அல்ல ஒரு ஏக்கர் 5 செண்டு நிலமாகும் என்றால் சரியல்ல.

8. அதேபோல் மேற்படி இடமானது காலியிடம் அல்ல தென்னம் தோப்பு என்றால் சரியல்லநான் வழக்கு தாக்கல் செய்த போது அரசு மதிப்பீடு எவ்வளவு என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்த போது அரசு மதிப்பின்படி ஒரு ஏக்கர் 10 லட்ச ரூபாய் ஆகும் எனவே நான் சரிவர வழக்கு சொத்தை மதிப்பீடு செய்யாமல் இந்த

நீதிமன்றத்தில் சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தாமல் தாக்கல் செய்துள்ளேன் அதேபோல் அரசு மதிப்பின்படியே மேற்படி வழக்கு சொத்தின் ஏக்கர் 10 லட்சம் இருந்தபோது அதை 6 லட்சத்திற்கு விற்க முன் வந்ததாக இந்த வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள புகைப்படம் அதன் அது எங்கு எடுக்கப்பட்டது என்று எந்தவிதமான தெளிவான குறிப்பு எப்போது எடுக்கப்பட்டது என்று குறிப்பும் இல்லை எனவே அந்த ஆவணம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. நான் இந்த வழக்கில் முதல் விசாரணை அளிக்கும் போதும் தற்போதும் எனது மகன் உடன் வந்துள்ளார் என்றால் சரிதான்மேற்படி பிரதிவாதி என்னிடம் கடன் பெற்று அதற்கு பாதுகாப்பிற்காக கிரைய ஒப்பந்தம் போட்டு அந்த கடனுக்கு 2020 காலம் வரை உரிய முறையில் வட்டி செலுத்தி வந்தார் என்றும் அதன் பிறகு கொரோனா காலத்தில் வட்டி செலுத்த முடியாமல் நிறுத்தப்பட்ட நிலையில் அந்த ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த தவறான வழக்கு பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்து உள்ளேன் என்றும் எனவே நான் கூறியுள்ள ஏற்றுகை ஆற்றுக பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல வெறுமனே நான் கொடுத்த கடன் பணத்தை திருப்பி செலுத்த பிரதிவாதி தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. எனது சாட்சியத்தில் எந்தவிதமான உண்மை தன்மையும் இல்லை என்பதால் எனது வழக்கமானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/−)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.